Stock file

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சி பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த திரு.ஆ.சாமிமுத்து (இளநிலை உதவியாளர்) அவர்களின் மகள் செல்வி சா.லூமினா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ப்பி2)த் துறை

அரசாணை (4ப) எண்.06

நாள்: 18.10.2019

விகாரி வருடம், ஐப்பசி 1,
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்க:

1. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடித ந.க.எண்.1966/பஅ3/2013, நாள் 26.04.2019.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.

------

ஆணை:–

முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்கள் திருச்சி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய போது 01.06.2012 அன்று பணியிடை மரணமடைந்த திரு.ஆ.சாமிமுத்து என்பவரது மகள் செல்வி சா.லூமினா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (பயிற்சிப்பிரிவு) அவர்களின் 10.10.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி கடலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு 16.10.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அரசாணை நிலை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–இல் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு மட்டுமே துறை அளவில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி பணியாளர் 16.10.2017 முற்பகல் பணியில் சேர்ந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு 01.02.2016–க்கு பின்னர் தனியர் பணிநியமனம் செய்யப்பட்டதால், தனியரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பெற்றுத் தருமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி இந்நேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டிய தேவையில்லை என்பதால், அக்கருத்துருவை ஏற்று பணியிடை மரணமடைந்த திரு.ஆ.சாமிமுத்து என்பவரது மகள் செல்வி சா.லூமினா என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை பயிற்சி பிரிவில் இளநிலை உதவியாளர் பதவியில் 16.10.2017 மு.ப. முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஆகியவற்றினை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். இதுகுறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

4. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி2) துறையின் அ.சா.எண்.30415/ஜி2/2019, நாள் 17.09.2019ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32. (இ) (அசல் மூலச் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).

செல்வி சா.லூமினா, இளநிலை உதவியாளர் (வழி:– ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32.

சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

<u>நகல்</u>

அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை – 9.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ) துறை, சென்னை – 9.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–II) துறை, சென்னை – 9.

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

மே.இ. எண் 3641 /கி2/ 17
நாள் 11.19

துணை இயககுநர் / முதல்வர் இ அலுவலகம்
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்
கடலூர்.

அனுப்பப்படுகிறது

பெறுநர்
திருமதி. சா.லூமினா கிநஉ.2,
அ.தொ.ப.நி. கடலூர்

துணை இயககுநர் / முதல்வர்
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்
கடலூர்.